C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

உ

ஷோடசோபசார அனுபவ விளக்கம்

ஆசிரியர் :

சிவஸ்ரீ. R. ஸுந்தரேச சிவம்

முறையூர்.

மணி விழா மலர்

சிவஸ்ரீ. M.S. வீராசாமிக் குருக்கள்

ஸ்ரீமதீ. M. மீனாக்ஷீ

தேவகோட்டை.

30-12-2009 மார்கழி மாதம் 15-ம் நாள்

புதன்கிழமை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

உ

ஷோடசோபசார அனுபவ விளக்கம்

ஆசிரியர் :

சிவஸ்ரீ. R. ஸுந்தரேச சிவம்

முறையூர்.

மணி விழா மலர்

சிவஸ்ரீ. M.S. வீராசாமிக் குருக்கள்

ஸ்ரீமதீ. M. மீனாக்ஷி

தேவகோட்டை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	:	ஷோடசோபசார அனுபவ விளக்கம்
ஆசிரியர்	:	R. ஸுந்தரேச சிவம்
மொழி	:	தமிழ், ஸம்ஸ்க்ருதம்
எழுத்து	:	க்ரந்தம் , தமிழ்
எழுத்தளவு	:	12 புள்ளிகள்
அளவு	:	1/8 size
தாள்	:	மேப்லித்தோ
பக்கம்	:	36
முதல் பதிப்பு	:	2009
பிரதிகள்	:	500
கணினி வடிவமைப்பு & அச்சிட்டோர்	:	ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம், நயினாரகரம், தென்காசி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பொருளடக்கம்

1. பதிப்புரை v

2. முன்னுரை vii

3. ஷோடசோபசார அனுபவ விளக்கம் 1

4. சண்டீசரை ஏன் முழுமையாக வலம் வரக்கூடாது 22

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அருள்மிகு மீனாக்ஷி சுந்தரேச்வரர்

மதுரை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

மணிவிழா மலர்

சிவஸ்ரீ. M.S. வீராசாமிக் குருக்கள்

ஸ்ரீமதீ. M. மீனாக்ஷி

தேவகோட்டை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-I

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பதிப்புரை

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
"தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தைசொல்மிக்க மந்திரமில்லை"

எல்லாம் வல்ல பரமேச்வரன் மீனாக்ஷிஅம்மன் உடனமர் சுந்தரேசப்பெருமானின் திருவருட் துணைக் கொண்டு நடைபெறும் எங்களது பெற்றோரின் மணிவிழாவில் "ஷோடசோபசார அனுபவ விளக்கம்" என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலில் ஆசிரியர் முறசை ஸுந்தரேச சிவம் அவர்கள் இரண்டு வகையான ஷோடச உபசாரங்களை இறைவனுக்கு ஸமர்ப்பிக்கும்போது தனக்கு ஏற்பட்ட, தான் உணர்ந்த அனுபவங்களை நமக்குத் தந்துள்ளார். மிகவும் அற்புதமான விளக்கங்கள், ஆழ்ந்த கருத்துகள். வழிபாடு செய்கின்ற அனைவரும் உணர்ந்துக்கொள்ள வேண்டிய அவசியமான விஷயங்கள். எனவே அனைவரும் இதனைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எங்களின் பேரவா.

இந்நூல் வெளியிடுவதற்கு உதவிய திருப்பரங்குன்றம் G.கார்த்திகேய சிவம் அவர்களுக்கும், நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த தென்காசி, நயினாரகரம், ஸ்ரீதுர்கா ஆய்வியல் நிறுவனத்தாருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

பேரன்புடன்,

ஸ்ரீமதீ. S அன்னபூரணி சிவஸ்ரீ. R. சங்கர்
சிங்கப்பூர்.

ஸ்ரீமதீ. R. ஐச்வர்யா சிவஸ்ரீ. D. ராஜேஷ்
சிங்கப்பூர்(camp), மானாமதுரை.

ஸௌபாக்யவதீ V.கனகதாரா
தேவகோட்டை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

முன்னுரை

இறைச்சக்தி என்பது உலக உயிர்கள் அனைத்துள்ளும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்திருக்கக் கூடிய ஒன்று. பசுவின் உடலெங்கும் பால் நிறைந்திருந்தாலும் அதனைக் கரந்து வெளிக்கொணர அதன் மடியும், காம்பும் உபயோகப் படுவதுபோல இறைச்சக்தி எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருந்தாலும், அதனைச் சேமித்து வெளிக்கொணரும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயம் என்ற சொல்லை ஆ+லயம் எனப் பிரித்து, ஆ= ஆன்மா, லயம்= ஒடுங்குதல் எனப் பொருள் கொண்டு ஆன்மாக்கள் ஒடுங்கும் இடம் ஆலயம் எனப் பொருள் கூறுகின்றன முந்தைய நூல்கள்.

அந்த வகையில் எழுந்த ஆலயங்களில் பலவிதமான வழிபாடுகள் நடைபெறுகின்றன. தினசரி வழிபாடுகள், வார வழிபாடுகள், பக்ஷவழிபாடுகள் மாதாந்திர, வருடாந்திர விழாக்கள் இப்படி வழிபாடுகள் பலவிதமாக வகுக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. இப்படி எந்த வழிபாடாக இருந்தாலும் அதில் முக்கிய இடம்பெறுவது ஷோடச உபசாரங்கள் என்றால் அது மிகையில்லை. பொதுவாக மந்திரங்களை அதன் பொருளுணர்ந்து சொன்னால்தான் முழுப்பலனைப் பெற இயலும் என்று சொல்லுவார்கள், அதேபோல செய்யக்கூடிய கிரியைகளையும் அதனை எதற்காகச் செய்கிறோம் என்பதனை உணர்ந்து ஈடுபாட்டுடன் செய்தால்தான் செய்யும் பூஜைக்கான முழுப்பலனை நாம் அடையமுடியும். அந்த வகையில் ஷோடசோபசாரத்தில் மறைந்துள்ள தத்துவ உண்மைகளை என் சிற்றறிவிற்கு எட்டிய வகையில் இந்தக்கட்டுரையில் வெளிக்கொணர முயன்றிருக்கிறேன். படியுங்கள், உணர்ந்து பின்பற்றுங்கள், பயன்பெறுங்கள்.

நன்றி !

முறசை ஸுந்தரேச சிவம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

ஷோடசோபசார அனுபவ விளக்கம்

ஷோடசம் என்ற சொல் "16" என்ற எண்ணைக் குறிக்கும். உபசாரம் என்ற சொல்லுக்கு, முகமன், மரியாதை, ஊழியம், வழிபாடு, வாழ்த்து என்றெல்லாம் பொருளுண்டு. எனவே பதினாறு விதமான ஊழியம், பதினாறுவிதமான மரியாதை, பதினாறு விதமான பணிவிடை என்றெல்லாம் இந்த ஷோடசோபசாரம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். இந்த ஷோடசோபசாரம் இரண்டு வகையில் ஆலய வழிபாடுகளில் மேற்கொள்ளப்படுகிறது. அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

ஷோடசோபசாரம் முதல்வகை:

உலகப்பிரசித்தம் பெற்ற ஒருவர் இருக்கிறார். அவரை அறியாதார் யாரும் இல்லை. வாழ்நாளில் ஒருமுறையேனும் அவரைக் கண்கொண்டு பார்த்துவிட மாட்டோமா எனப் பலரும் ஏங்கிக் கொண்டிருக்கும் ஒருவர். அப்படிப்பட்டவர் நம்முடைய இல்லத்திற்கு வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவரை எந்த அளவு உள்ளன்போடும், மனமகிழ்ச்சியோடும், மரியாதையோடும் வரவேற்று உபசரிப்போம். அந்த வகையில் அமைவது இந்த முதல்வகை ஷோடசோபசாரம்.

இந்த உபசாரங்கள், 1. ஆவாஹனம், 2. ஸ்தாபனம், 3.பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்யம், 6. அபிஷேகம், 7. வஸ்த்திரம், கந்தம் (அலங்காரம்) 8. புஷ்பம், 9. தீபம், 10. நிவேதனம், 11. பலிதானம், 12. ஹோமம், 13. பலி, 14. பாட்டுவாத்யம், 15. நர்தனம், 16. உத்வாஸனம். எனப் பதினாறு வகைப்படும். இதனை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

ஆவாஹநஞ்ச ப்ரதமம் ஸ்தாபநஞ்ச த்விதீயகம் ।
த்ருதீயம் பாத்யதோயம் ஸ்யாது ஆசாமந்து சதுர்த்தகம் ॥
பஞ்சமஞ்சார்க்ய விந்யாஸம் ஷஷ்டஞ்சைவாபிஷேசநம் ।
ஸப்தமம் வஸ்த்ர கந்தஞ்சாப்ய ஷ்டமம் புஷ்ப பூஜனம் ॥
நவமம் தூபதீபம்ஸ்யாது தசமந்து நிவேதனம் ।
ஏகாதசம் பலிம்குர்யாது த்வாதசோ ஹோமமுச்யதே ॥
த்ரயோதசம் ஸ்ரீபலிஞ்ச கேயவாத்யம் சதுர்தசம்।
ந்ருத்தம் பஞ்சதசம் ப்ரோக்தம் உத்வாஸ: ஷோடசோபவேத் ॥

(காரணாகமம்)

(மேற்கூறிய ச்லோகம் தமிழ் எழுத்தில்)
ஆவாஹனந்து ப்ரதமம், ஸ்தாபனந்து த்விதீயகம் |
த்ருதீயம் பாத்யதோயம் ஸ்யாது ஆசாமந்து சதுர்த்தகம் ||
பஞ்சமஞ்சார்க்ய விந்யாஸம் ஷஷ்டஞ்சைவாபிஷேசநம் |
ஸப்தமம் வஸ்த்ர கந்தஞ்சாப்ய ஷ்டமம் புஷ்ப பூஜனம் ||
நவமம் தூபதீபம்ஸ்யாது தசமந்து நிவேதனம் |
ஏகாதசம் பலிம்குர்யாது த்வாதசோ ஹோமமுச்யதே ||
த்ரயோதசம் ஸ்ரீபலிஞ்ச கேயவாத்யம் சதுர்தசம்|
ந்ருத்தம் பஞ்சதசம் ப்ரோக்தம் உத்வாஸ: ஷோடசோபவேத் ||

(காரணாகமம்)

என்று காரணாகமம் வகைப்படுத்திக் கூறுகிறது.

வந்தவிருந்தினரை முகமன்கூறி வரவேற்றுத் தனக்கு எதிர்முகமாக இருக்கச் செய்தல் (எதிர்கொண்டழைத்தல்) **ஆவாஹனமாகும்.**

பக்தி மேலிட ஆஸனத்தில் இருத்தி உபசரிப்பது **ஸ்தாபனம்** ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

"தாங்கள் இங்கு எழுந்தருள நான் மிகவும் பாக்யம் செய்துள்ளேன். நான் தங்கள் அடியவன், ப்ரபுவே தங்களுக்கு வந்தனம்" என்று கூறுவது **ஸந்நிதானம்.**

"அடியேனுடைய வழிபாடு முடியும்வரை தாங்கள் பொறுத்துக் காத்திருந்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வேண்டுவதற்கு ஒப்பானது **நிரோதனம்** ஆகும்.

வந்த விருந்தினரின் கால்களைக் கழுவி, அவருக்கு முதலில் தாக சாந்திக்காக ஏதாவது பானங்கொடுத்து உபசரிக்கும் வகையில் அமைவது **பாத்யம், ஆசமனம், அர்க்யம்** ஆகிய உபசாரங்களாகும்.

விருந்தினரைக் களைப்பு நீங்க பலவித வாசனைத் திரவியங்கள் கலந்த ஸுகந்த நீரில் குளிக்கச் செய்து புது வஸ்த்திரம் கொடுத்துத் தரிக்கச் செய்து, சந்தனம் குங்குமம் போன்றவற்றால் அலங்கரித்து மலர்மாலைகள் சாற்றி உபசரிப்பது போன்றது **அபிஷேகம், வஸ்த்ரகந்தம், புஷ்பம்** ஆகிய உபசாரங்களாகும்.

அகில், மட்டிப்பால், சந்தனத்தூள்முதலான வாசனைப் புகையுடன் ஒளி வெள்ளத்தில் பலவிதமான உணவு வகைகளைப் பரிமாறிப் புசிக்கச்செய்வது **தூபதீப நிவேதனம்.**

அவர் உடன் வந்துள்ள உதவியாளர்கள் போன்ற அதிகாரிகளை உபசரிப்பது போன்றது **பலிதானம்.**

விருந்தினருக்கானத் தனிப்பட்ட சிறப்பு உபசரிப்பு போன்றது **ஹோமம்.**

அவருடைய பாதுகாவலர் போன்றவர்களுக்குச் செய்யும் உபசரிப்பு போன்றது **பலி.**

விருந்தினரை மகிழ்விக்கும் பொருட்டு நடத்தப்படும் பாட்டு, வாத்தியம், நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகளைப் போன்றது **வாத்யம், நர்தனம்** போன்ற **உபசாரங்கள்.**

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

வருகைக்கு நன்றிகூறி நமக்கு மிகவும் பிரியமான ஒருவரைப் பிரியும் மனோபாவத்துடன் கண்ணீர் மல்கப் பிரியாவிடை கொடுத்து அனுப்புவது **உத்வாஸனம்.**

இவ்வாறாக 16 விதமான உபசாரங்கள் சொல்லப் பட்டுள்ளது. நம்முடைய பக்திக்கும், உபசரிப்புக்கும் மகிழ்ந்து நமது விருப்பத்தை வேண்டுதலை இறைவன் நிறைவேற்றும் விதமாக இந்த முதல்வகை ஷோடசோபசாரம் அமைந்துள்ளது.

இதிலிருந்து இன்னொன்றையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. - (குறள்- 90)

என்று குறள் வலியுறுத்துவது போல விருந்தினரை முக மலர்ச்சியுடனும் ஈடுபாட்டுடனும் உபசரிக்க வேண்டும். அவ்வாறின்றிக் கடனாகச் செய்யும் உபசாரத்தால் விருந்தினரின் வெறுப்பைத்தான் சம்பாதித்துக்கொள்ள நேரிடும். சிலகாலம் வாழ்ந்து மறையும் மனிதனுக்குச் செய்யும் உபசரிப்பே இவ்வாறு அமையவேண்டும் என்றால், நித்யவ்யாபியான பரம்பொருளுக்குச் செய்யும் உபசாரம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பூஜாகாலங்களில் பூஜிக்கும் ஆசார்யன் மிகுந்த பக்திச்ரத்தையுடனும், நம்முள் இறைவன் எழுந்தருளியிருக்கிறான். அவனுக்கு நாம் உபசாரம் செய்து கொண்டிருக்கிறோம். என்ற எண்ணங்கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடனும், உபசாரங்களைச் செய்யவேண்டும். நம்முடைய பக்திக்கும், ஈடுபாட்டிற்கும் மட்டுமே இறைவன் மகிழ்ச்சியடைகிறானே தவிர, நாம் செய்யும் உபசரிப்புக்காக அல்ல என்பதைப் புரிந்துகொண்டு பூஜிக்க வேண்டும். அவ்வாறின்றிக் கடனாக நினைத்து எண்ணத்தை எங்கோ வைத்துக்கொண்டும் பராக்குப் பார்த்துக்கொண்டும் செய்யும் பூஜையால் இறைவனை நாம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அவமதிக்கிறோம். அப்படிப்பட்ட வழிபாட்டை அவன் ஏற்பதில்லை. அதனால் நமக்குப் பாதகமான விளைவுகளே விளையும் என்பது உண்மை.

வேசமாய்ச் செய்யும் வெளிவழிபாடெலாம்
காசுளார் தமைக் கண்ட போதினில்
வேசையாள் செய்யும் பூசனை போன்றது
ஈசனார் அதை ஏற்பதில்லையே.

ஷோட சோபசாரம் இரண்டாம் வகை:-

இந்த வகை ஷோடசோபசாரம் மிகுதியும் தீப வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைவது. முன்பு கூறப்பட்ட ஷோடசோபசாரத்தின் இடைக்கூறு என்று இதனைச் சொல்லலாம். அதில் வரும் தூபமும், தீபமும் இவ்வகை உபசாரத்தின் முதல் இரண்டு அங்கங்களாகும். நிவேதனத்திற்க்கு அடுத்து வரும் மஹாதீபம் முதல் நீராஜனம் முதலான 14 உபசாரங்களையும் இணைத்து இவை மொத்தம் 16 ஆகும்.

அவையாவன:-

1. தூபம் 2. தீபம் 3. மஹாதீபம் 4. நாகதீபம் 5. வ்ருஷபதீபம் 6. புருஷம்ருக தீபம் 7. பஞ்சதட்டுடன் கூடிய பூர்ணகும்பம் 8. நட்சத்திர தீபம் 9. மேரு தீபம் 10. விபூதி 11. கண்ணாடி 12. குடை 13. சாமரம் 14. ஆலவட்டம்

ꣳவதீவம் ஃஹாதீவம் நாமம் வ்ருஷஹதெவ ச ।
ஃருமம் கூம்ஹம் வளுதீவம் நக்ஷத்ரம் தொꣳதீவகு ॥
கவபூமா தீவதெவொத்தம் ஃஹாநீராஜநம் ததா ।
உவசாரொஷ்டாலஸஹிꣳ வ்ஜயெதாதெஷ்வரா ॥

இது ஸம்க்ஷிப்தாகமத்தில் கூறப்பட்டுள்ள பொதுவான விதி. அந்தந்த ஆலயத்தில் பின்பற்றப்படும் ஆகம வழிமுறை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அந்த ஆலயத்திற்குரிய தனிச்சிறப்பு, பாரம்பரிய நடைமுறை முதலானவற்றை பொறுத்து இவற்றில் ஒருசில மாறுதல்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக விநாயகர், முருகன், அம்பிகை, மாரியம்மன், காளியம்மன், போன்ற தெய்வங்களுக்கான பிரத்யேக ஆலயங்களில் வ்ருஷப தீபத்திற்கு பதிலாக மூஷிக தீபம், மயூர தீபம், சிம்ம தீபம், சூல தீபம் போன்ற தீபங்கள் இடம் பெற்றிருக்கும். பூர்ண கும்பத்தில் பூஜிக்கப்படும் பஞ்ச தட்டுக்களுக்கு பதிலாக ஐந்து முகம், மூன்று முகம், இரண்டு முகம், ஏக முகம் போன்ற தீபங்கள் பயன்படுத்தப்படுவதும் வழக்கத்தில் உள்ளது. இன்னும் சில ஆலயங்களில் இதைவிட அதிகமான எண்ணிக்கையில் தீபங்கள் காட்டப்படுவதும் உண்டு. இது போன்ற மாறுதல்கள் காணப்பட்டாலும் இவ்வகை வழிபாடு ஷோடசோபசாரம் என்றே வழங்கப்பட்டு வருகிறது.

முந்தைய ஷோடசோப சாரம் பெரிதும் உணர்வுப் பூர்வமானது என்றால் இவ்வகை தீப வழிபாடு தத்துவப் பூர்வமானதாக விளங்குகிறது. இந்த தீபவழிப்பாட்டுக்கள் மறைபொருளாகப் புதைந்து கிடக்கின்ற தத்துவ உண்மைகள் இனி வெளிக்கொணர முயல்வோம்.

இறைவன் ஜோதி வடிவமானன் என்பதிலே அனைத்து அருளாளர்களின் கருத்தும் ஒத்தே இருக்கிறது.

"கற்பனைக் கடந்தஜோதி கருணையே உருவமாகி"

(பெரிய புராணம்)

(கற்பனை செய்ய இயலாத அளவிற்கு மிகப்பெரிய நெருப்பாக இருந்தால் வெப்பமும் தாங்க முடியாத அளவு இருக்குமே என்ற ஐயப்பாடு ஏற்படுவது இயல்பு. அதனால் அடுத்த கணமே "கருணையே உருவமாகி" என்று நமது ஐயத்தை தெளியவைப்பது சிறப்பு)

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

"மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

"சுடரில் திகழ்கின்ற ஜோதி போற்றி"

"திருவே என் செல்வமே தேனே வானோர்

செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நற்சோதி மிக்க உருவே"

என்று தேவாரம் பாடிய மூவரும் இறைவனை ஜோதி வடிவாகவே காண்கிறார்கள்.

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே"

"மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"

"காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே"

என்று மணிவாசகரும் தமது திருவாசகத்தில் இறைவனை ஜோதிவடிவாகவே வருணிக்கிறார்.

உத்யத் கோடி ப்ரகாசம்

ஆதீப்த தஹன மூர்த்தானம் ।

பீஷண புஜங்க பூஷம்

த்யாயேத் விவிதாயுதம் ருத்ரம் ॥ (யாஜுஷ:)

(உத்யத் – பாஸ்கர கோடி – ப்ரகாசம்

ஆதீப்த - தஹன – மூர்த்தானம் ।

பீஷண புஜங்க பூஷம்

த்யாயேத் விவிதாயுதம் ருத்ரம் ॥) (யஜுர் வேதம்)

என்று யஜுர்வேதமும், இறைவனைக் கோடிசூர்யப்ரகாசத்திற்குச் சமமான ஜோதி வடிவானவனாகவே காட்டுகிறது. இவ்வாறு ஜோதிவடிவான இறைவனை, ஜோதியைக் (தீபத்தை) கொண்டு ஆராதிக்கும் விதமாக எழுந்த வழிபாடே இந்த இரண்டாம் வகை ஷோடாசோபசாரம் ஆகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

ஆலயங்களைப் பொருத்தவரை கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மின்சாரப் பயனீடு என்பது அறியப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. சென்ற நூற்றாண்டில் மத்தியப் பகுதிக்குப் பின்னரே அதிகமான ஆலயங்களில் மின்சாரம் பயன்பாட்டிற்கு வந்தது. ஆனாலும் இன்றுவரை பெரும்பகுதி ஆலயங்களில் ஆலயத்தின் கர்பக்ரஹங்களில் மின்விளக்குகளைப் பயன்படுத்துவது இல்லை என்ற நடைமுறை வழக்கிலிருந்து வருகிறது. எனவே, முழுவதும் இருட்டான சூழ்நிலையில் அமைந்துள்ள தெய்வத் திருமேனியைப் பக்தர்கள் நன்கு தரிசிப்பதற்காக எழுந்த வழிபாடே இவ்வகைத் தீபவழிபாடு என்று எடுத்துக்கொள்ளலாமா? என்றால் ஓரளவிற்கு இது ஏற்புடையதே. ஆனால் நாகரீக வளர்ச்சி துவங்கிய காலத்திலிருந்தே சரவிளக்கு முதலான தீபங்களை ஸன்னதியில் தொடர்ந்து எரியச்செய்து கர்பக்ருஹத்தை எப்போதும் ஒளிவெள்ளத்திலேயே வைத்திருந்து வந்திருக்கிறார்கள். அதுவும் போதாதென்றால் மேலும் ஒரு தீபத்தைப் பிரகாசமாக எரியச்செய்து மேலும் கீழும் நிதானமாகக் காட்டினாலே போதும், இறையுருவத்தைப் பக்தர்கள் நன்றாகத் தரிசித்து விட முடியும். (பூஜையல்லாத சாதாரண நேரங்களில் சேவார்த்திகள் தரிப்பதற்காக இறையுருவத்திற்குக் காட்டப்படும் கற்பூர தீபம், நெய் தீபம் போன்றவை இதன் அடிப்படையிலேயே எழுந்திருக்க வேண்டும்.) அப்படியிருக்கும்பொழுது இத்தனை விதமான தீபங்கள் எதற்கு? கொஞ்சம் சிந்திக்க வேண்டிய விஷயம்தான்.

ஷோடசோபசாரத்தில் தூபத்திற்கு - அக்னி, மஹாதீபம் (என்ற) அலங்கார தீபத்திற்கு - சிவன், வ்ருஷப தீபத்திற்கு - தர்மதேவதை, புருஷதீபத்திற்கு - விஷ்ணு, பூர்ணகும்ப தீபத்திற்கு – ருத்ரர், பஞ்ச தட்டுகளுக்கு – பஞ்சப் பிரஹ்மங்கள் தேவதைகள், நக்ஷத்ர தீபத்திற்கு – 27 நக்ஷத்திரங்கள், மேரு தீபத்திற்கு – 11 சூரியர்கள், விபூதிக்கு – பரமேச்வரன்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

கண்ணாடிக்கு - ஸூரியன், குடைக்கு - சந்திரன், சாமரத்திற்கு – மஹாலக்ஷ்மி, விசிறிக்கு – வாயுதேவன், ஆலவட்டத்திற்கு – ப்ரஹ்மா, பஞ்சமுக ஹாரத்திக்கு - ஈசானாதிகள், கற்பூர தீபத்திற்கு - அக்னி. என ஒவ்வொரு தீபத்திற்கும் ஒவ்வொரு தேவதை பூஜிக்கப்பெற்று அதன்பிறகே அந்த தீபம் ஸ்வாமியின் திருமுன் காண்பிக்கப்படுகிறது. அப்படியானால் பூஜாகாலங்களில் அனைத்து தேவதைகளும் ஒரே ஸன்னதியில் கூடி அருள்பாலிக்கிறார்கள். ஆகையால் பூஜைவேளையில் ஷோடசோபசார தீப தரிசனத்தின் மூலம், இந்திராதி தேவதைகள் அனைவரையும் ஒரு சேர வணங்கிய பலன் ஸேவார்த்திகளுக்குக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளலாமா? என்றால் அதுவும் ஓரளவிற்கு ஏற்புடையதுதான். இவையனைத்தையும் தாண்டி ஒரு உன்னதமான தத்துவக் கோட்பாடு இந்த வழிபாட்டில் மறைந்து கிடக்கின்றது. என்பதை அறிவோமா நாம்! அது என்ன? முதலில் மஹாதீபமென்னும் அலங்கார தீபத்திலிருந்து துவங்குவோம்.

அலங்கார தீபம்:-

மஹாதீபம் என்ற அலங்கார தீபத்தின் அமைப்பை ஆராய்ந்தோமானால் ஒரு உண்மை நமக்குத் தெள்ளத் தெளிவாக. விளங்கும். அலங்கார தீபத்தின் அடித்தட்டு அகண்டு பெரிதாக இருக்கும். அதில் ஒற்றைப்படை எண்ணிக்கையில் குறைந்தது 11 குழிகள் அமைக்கப்பெற்று 11 தீபங்கள் ஏற்றப்படும் வகையில் அமைந்திருக்கும். அதைப்போலவே அதற்கு மேலுள்ள தட்டு 9 குழிகள் கொண்டதாகவும், அதன் மேலுள்ள தட்டு, 7 குழிகள் கொண்டதாகவும் அதற்கு மேலுள்ள 5 குழிகள் கொண்டதாகவும் அமைந்திருக்கும். இவற்றில் 11 விளக்குகள் கொண்ட தட்டு ஏகாதச (11) ருத்ரர்களையும், 9 விளக்குகள் கொண்ட தட்டு நவ (9) கோள்களையும் 7 குழிகள் உள்ள தட்டு ஸப்த (7) மாதர்களையும், 5 குழிகள் உள்ள தட்டு ஈசானாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

பஞ்ச (5) முகங்களையும் குறிக்கும் என்று ஆகம வல்லுனர்கள் பொருள் கூறுகின்றனர். இவை அனைத்திற்கும் மேலாக ஒருமுகம் கொண்ட தீபம் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் இது எல்லாம் வல்ல பரம்பொருளைக் குறிக்கும். (இவ்வகை 5 அடுக்கு தீபங்கள் பரவலாகக் காணப்படுகிறது. இன்னும் 7 அடுக்குகள் கொண்ட பெரிய மஹா தீபங்களும் உள்ளன.)

ஆக எல்லாம் வல்ல ஜோதி ரூபமான ஒரே பரம்பொருள் பலவிதமான வடிவங்களில் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், (ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம்) என்கின்ற ஐந்தொழில்களைப் பரிபாலிக்கக் கூடிய பஞ்சப்பிரஹ்மங்களாக, ஸப்த மாதர்களாக, நவ கோள்களாக, 11 ருத்திரர்களாக இன்னும் அனேக விதமான ரூபங்களில் பிரகாசிக்கிறான் என்ற மேலான தத்துவத்தை விளக்கி நிற்பது கண்கூடு.

இதனையே

"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" (சிவபுராணம்)

என்றார் மணிவாசகப் பெருந்தகை.

ஏகன் = ஒருவன்

அநேகன் = பலவித ரூபங்களில் மிளிர்பவன்

இறைவன் = தலைவன் - கடவுள்

ஒரே இறைவன் உலகம் உய்யும் பொருட்டுப் பலவிதமான ரூபங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கிறான். என்கின்ற உயரிய தத்துவத்தை உணர்த்துவதே அலங்கார தீபம் என்னும் மஹாதீபமாகும்.

அப்படியென்றால் அதே தீபம், விநாயகர் ஸன்னதியிலும் காட்டப்படுகிறது. சிவாலயத்திலும் காட்டப்படுகிறது. விஷ்ணு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அம்பிகை இப்படி எல்லா ஸன்னதிகளிலும் மஹாதீப வழிபாடு நடைபெறுகிறதே இவர்களில் எல்லோரும் பரம்பொருளா? என்ற வினா எழும். உலகம் முழுமைக்கும் ஒரே சூரியனே ஒளி தருகின்றது. அந்தச் சூரியன், தமிழில் ஆதவன், கதிரவன் என்றும், ஆங்கிலத்தில் (SUN)- சன்- என்றும் வடமொழியில் ஆதித்யன் என்றும் அழைக்கப்பெற்று வருகிறது. இதுபோலத்தான் ஒரே பரம்பொருள் சக்தியென்றும், சிவம் என்றும், விநாயகர் என்றும், விஷ்ணு என்றும் அழைக்கப்பெற்று வருகிறது என்ற உண்மையும் இவ்வழிபாட்டில் மறைபொருளாக உணர்த்தப்படுகிறது. இந்த உண்மையை உணர்த்த எழுந்த வடிவங்களே அர்த்த நாரீச்வரர், சங்கர நாராயணர் போன்ற வடிவங்களாகும்.

"சுடரோ சிவபெருமான் சூடுபராசக்தி
திடமார் செம்மை கணநாதர்
படரொளியோ கந்த வேள் ஆகும்கால்
சற்றேதும் வருமோ பேத வழக்கு" (ஞான சாரம்)

என்று ஞானசாரம் கூறும் கருத்து இங்கு நினைவு கூறத்தக்கது.

நாகதீபம் முதலியன :-

மஹாதீப வழிபாட்டில் மறைந்துள்ள தத்துவ உண்மையைப் புரிந்து கொண்டோம். சரி அதென்ன நாக தீபம், வ்ருஷப தீபம், புருஷதீபம், மயூர தீஓபம், ஸிம்ஹதீபம், என்றெல்லாம் பலவிதமான உருவங்களின் உச்சியில் விளக்கேற்றி அதனைக் கொண்டு வழிபடுவது?

பொதுவாகவே அனைத்து தெய்வங்களுக்கும் பாம்போடு நெருங்கிய தொடர்பு உண்டு என்றால் அது மிகையில்லை. பெருமாலுக்கு அது மஞ்சம், சிவ பெருமானுக்கு அது ஆபரணம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

மாரியம்மனுக்கு அது குடை, விநாயகருக்கு நாகம் அரைஞாண் கயிறு, இது போல இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். அதுபோல ஒவ்வொரு கடவுளும், ஒவ்வொரு மிருகத்தைத் தத்தம் வாகனங்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர், என்பதும் அனைவரும் அறிந்ததே. சிவனுக்கும் அம்பிகைக்கும் ரிஷபம், பெருமாலுக்கு கருடன், முருகப்பெருமானுக்கு மயில், ஆகையினாலே எந்த தெய்வத்திற்கு வழிபாடு நடைபெறுகிறதோ அதனுடைய வாகன மிருகத்தினுடைய தீபம் தவறாமல் இடம்பெறும். ஆக அந்த தெய்வத்திற்கும் மிருகத்திற்கும் உள்ள தொடர்பை உணர்த்தும் விதமாக எழுந்தது இவ்வகை வழிபாடு என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் எந்தக் கடவுளும் மனிதனை மட்டும் சற்று விலக்கியே வைத்திருப்பது போலத்தான் தோன்றுகிறது. எந்த தெய்வமும் மனிதனை வாகனமாக வைத்துக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் ஷோடசோபசார தீப வழிபாட்டில் புருஷாம்ருக தீபம் என்ற பெயரில் மனித உருவமும் இடம் பெறுகிறதே? இதனுடைய மறைபொருள் என்ன? எல்லா உயிர்களுக்குள்ளும் இறைவன் உறைகிறான் என்பதை உணர்த்துவதுதான் இதன் மறைபொருள் என்று ஒரே வாக்கியத்தில் பொருள் கூறிவிட முடியும். ஆனால் அந்த விளக்கம் போதாது என்று என் மனதுக்குப் படுகிறது. இதனை மேலும் நுனுக்கமாக ஆராய வேண்டும் என்று முயன்றபோது சித்த இலக்கியங்கள் அதற்குக் கை கொடுத்தன.

முதலில் மனிதனுடைய உடற்கூறுபற்றி யோகசாத்திரம் கூறும் செய்திகளைப் பார்ப்போம். யோக சாஸ்த்திரம் மனித உடலை ஆறு பாகங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆதார மையங்களை வகுத்துள்ளது.

அதனைப்பற்றி இங்கு காண்போம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

மனித உடலின் 6 ஆதாரங்கள்

எண்	பெயர்	இடம்	மூர்த்தி	எழுத்து
1	மூலாதாரம்	மலவாய்க்கும் இனக்குறிக்கும் இடையில் உள்ள அக்னி மண்டலம்	விநாயகர்	ஓம்
2	ஸ்வாதிஷ்-டானம்	தொப்புளுக்கு நான்கு அங்குலம் கீழே இனக்குறிக்கு அருகில் உள்ளது. மண்ணின் தன்மை யுடையது. உயிர் உற்பத்திக்குக் காரணமானது	பிரம்மன்	ந
3	மணிபூரகம்	தொப்புள் பகுதியில் உள்ளது. நீரின் தன்மையுடையது	விஷ்ணு	ம
4	அநாஹதம்	ஓயாமல் துடித்துக்கொண்டிருக்-கும் இதயப்பகுதியில் உள்ளது. அனலின் தன்மையைக் குறிப்பது.	ருத்ரன்	சி
5	விசுக்தி	தொண்டையில் உள்ளது. காற்றின் தன்மையைக்குறிப்பது	மஹேச்வரன்	வா
6	ஆக்ஞேயம்	நெற்றியின் நடுவில் புருவ மத்தியில் உள்ளது. ஆகாயத்தின் தன்மையைக் குறிப்பது.	சதாசிவர்	ய

(குனங்குடியாரின் ஞானவழி)
(நன்றி - திரு. ப. கமலக்கண்ணன்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

இப்படி ஆறு ஆதாரங்களில் ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞேயம் ஆகாயத்தின் தன்மையோடு நெற்றியின் நடுவில் அமைந்திருக்கிறது என்பதைப் பார்த்தோம். அதற்குச் சற்று மேலே கபாலத்தின் உட்புறம் மையப் பகுதியில் ஆயிரம் இதழ்க் கொண்ட தாமரை வடிவத்தில் அமைந்த தசைப்பகுதி உள்ளது என்றும், அதன் மையத்தில் ஜீவன் என்னும் உயிர்சக்தி தங்கி இவ்வுடலை இயக்கிக் கொண்டிருக்கிறது என்றும் யோக நூல்கள் கூறுகின்றன. (ஸஹஸ்ராரம் என்று இதற்குப் பெயர்).

இதனை "ஸஹஸ்ரதள பத்மஸ்தாயை நம: ||
என்று லலிதா ஸஹஸ்ரநாமம் வருணிக்கும்.

இவ்வாறு அந்த ஸஹஸ்ரதள பத்மத்தில் தங்கும் ஜீவனின் வடிவு குறித்துத் திருமூலர் கூறுவதைப் பார்ப்போம்.

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்றை நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறது நூறாயிரத் தொன்றே"

(திருமந்திரம் - 2011)

அதாவது பசுவின் உடலிலிருந்து ஒரு உரோமத்தை எடுத்து அதை ஒருலட்சம் கூறுகளாகப் பிரித்தால் எவ்வளவு நுண்ணியதாக இருக்கும். அந்த அளவு அணுவுக்கள் அணுவாகத் தோன்றும் அளவே ஜீவனின் வடிவாகும் என்று திருமூலர் விளக்குகிறார் (மனித உடலை முழுவதுமாக ஆராய்ந்து வெளிப்படுத்திய முதல் விஞ்ஞானி திருமூலர் என்றால் அது மிகையில்லை. அவருடைய கூற்றுகள் உண்மை என்று சமீப காலமாக மெய்ப்பிக்கப்பெற்று நவீன ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.)

சரி அந்த அளவிற்கு நுண்ணியதாக இருக்கக்கூடிய அந்த ஜீவனை எவ்வாறு இனங்காண்பது என்ற ஐயப்பாடு எழுவது இயல்பு. அதற்கு அவசியமே இல்லை. காரணம் அதன் அளவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சிறியதாக இருந்தாலும் அது இயற்கையிலேயே பிரகாசம் பொருந்தியதாக உள்ளது. ஜீவன் என்னும் உயிர்சக்தி எங்கே எவ்வாறு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சித்தர்கள், ஞானிகள் தத்தம் பார்வையில் எவ்வாறு வருணித்திருக்கிறார்கள் என்பதைப் பின்வரும் பாடல் வரிகளால் அறியலாம்.

"நாசிமுனை மீதேறி நடக்கும் பாதம்
நடுவெளியாம் கமலம் உச்சி ஞானத்துள்ளே
மாசிலா வடிவு சிவலிங்கமாகி
மாசற்ற பளிங்கொளியாய் வந்த சோதி.

(திருவள்ளுவர் நாதாந்தசாரம் – 35)
(நன்றி. திரு. ப. கமலக்கண்ணன்)

ஜீவனானது கமல உச்சி ஞானத்துள்ளே குற்றமில்லாத சிவலிங்க உருவிலே ஸ்படிகம் என்ற பளிங்கு போல ஒளிவீசக் கூடியதாகத் திருவள்ளுவர் தனது நாதாந்தசாரம் என்ற நூலிலே கூறுகிறார். ("கமலம் உச்சி ஞானத்துள்ளே" என்று சொல்வதன் மூலம் ஜீவனானது தாமரையின் மத்தியிலே பிரகாசிக்கின்றது என்று கூறுவது கவனிக்கத்தக்கது.)

அடுத்ததாகத் திரு குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களும் இதே கூற்றை வலியுறுத்துவதைப் பின்வரும் அவரது கூற்றால் அறியலாம்.

"ரூஹீ என்ற ஜீவன் நீலநிறமான ஒளிவட்டத்தின் நடுவே பளிங்கு போலத்தோன்றும்"

(குணங்குடி மஸ்தான் சாஹிபு)

"உச்சியதன் கீழே உண்ணாவதன் மேலே
மெச்சும் சுடராய் விளங்குவே வந்தவரே"

(கடுவெளிச் சித்தர் பூரணஞானம் - 65)
(நன்றி. திரு. ப. கமலக்கண்ணன்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

என்று கடுவெளிச்சித்தரும் ஜீவன் ஜோதிவடிவமானது என்று கூறுவதோடு "மெச்சும் சுடராய் விளங்கவே வந்தவரே" என்று இறைவனை ஒளிவடிவாய் உயிர்ச்சுடராய் ஒவ்வொரு உயிருள்ளும் எழுந்தருளுகிறான் என்பதை மறைபொருளாய் உணர்த்துகிறார்.

"உச்சிக்கு நேராய் உண்ணாவிற்கு மேல் நித்தம்
வச்ச விளக்கு எரியுதடி"

(கொங்கணச் சித்தர் - 25)

என்று கொங்கணச் சித்தரும் இவர்கள் கூற்றை ஆமோதிக்கிறார்.

ஆக ஒரே ஸூர்யன் உலகில் உள்ள பலவிதமான பொருட்களின் மீதும் இறைசக்தியை ஒவ்வொரு உயிருள்ளும் தலைப்பகுதியில் தங்கி ஜீவனாய் பிரதிபலிக்கின்றது என்பது தெளிவாகின்றது. இதனைச் ஸன்னிதியில் வழிபடும் ஒவ்வொருவரும் உணர்ந்து அனைத்து உயிர்களையும் சமமாகப் பாவித்து அன்பு செலுத்த வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே, மனிதன், நாகம், வ்ருஷபம் போன்ற உருவங்களின் உச்சியிலே தீப ஜ்வாலையைப் பிரகாசிக்கச் செய்து இறையுருவத்தின் முன்னே காண்பிக்கப்படுகிறது.

ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந்து அங்குளன்

(திருமந்திரம் - 2012)

என்னும் திருமூலரின் வாக்கு இங்கு நினைவு கூறத்தக்கது.

பூர்ணகும்ப தீபம்:-

அடுத்ததாக பஞ்ச தட்டுக்களுடன் கூடிய பூர்ணகும்ப தீபம் குறித்துப் பார்ப்போம். பூர்ணகும்ப தீபம் என்பது மூடியுடன் கூடிய சிறிய குடத்தின் வடிவில் அமைக்கப் பெற்றிருக்கும். அதன் உச்சியில் பிரகாசமான தீபம் ஒன்று எரிந்து கொண்டிருக்கும். அதனைச் சுற்றிலும் 5 தட்டுகளின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

(ஒற்றை முகம் கொண்ட) ஐந்து தீபங்கள் வைத்துப் பூஜிக்கப்படும். அவை மத்தியில் ஈசானம், கிழக்கில் தத்புருஷம், தெற்கில் அகோரம், வடக்கில் வாமதேவம், மேற்கில் ஸத்யோஜாதம், ஆகியன. பஞ்சப் ப்ரஹ்மங்களைப் பூஜித்து அவை ஒவ்வொன்றாக இறைவன் முன் காண்பிக்கப் பெற்று நிறைவில் பூர்ணகும்ப தீபம் காண்பிக்கப்படும். இதிலிருந்து வெளிப்படும் உண்மை என்னவென்று பார்ப்பதற்கு முன்னால் இந்தத் தீபவழிபாடு எவ்வாறு செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டால் அதில் மறைந்துள்ள தத்துவ உண்மை தாமாகவே வெளிப்படும்.

பூர்ணகும்ப தீபம் காண்பிக்கப்படும் முன் மற்ற தீபங்களுக்கு இல்லாத சிறப்பு வழிபாடு தீபத்திற்குச் செய்யப்படுவதைப் பார்த்திருக்கலாம். அதாவது முதலில் பூர்ணகும்பத்தை ஏற்றவேண்டும். இவற்றை மத்தி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய திக்குகளில் பூர்ண கும்பத்தைச் சுற்றி வைக்கவேண்டும். அவற்றில் முறையே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்னும் பஞ்சப் ப்ரஹ்மங்களைப் பூஜிக்கவேண்டும். பிறகு பஞ்சதட்டுக்களையும் தனித்தனியாக இறையுருவத்தின் முன் காண்பிக்க வேண்டும். நிறைவாகப் பூர்ண கும்பத்தைத் திருமுன் சுழற்றித் தெரிசிக்கச் செய்யவேண்டும். இவ்வித வழிபாடு ஆலயங்களில் அன்றாடம் நடைபெறுவதை நாம் காண்கிறோம். தெரிசிக்கிறோம். ஆனால் அது ஏதோ ஸம்ப்ரதாயம் என்றெண்ணிப் பேசாமல் இருந்து விடுகிறோம்.

ஒரு பெரிய பாத்ரம் நிறைய நீர் இருக்கிறது. அதிலிருந்து ஐந்து சிறிய பாத்ரங்களில் நீரை எடுத்து நிறப்புகிறோம். இப்போது அண்டாவில் உள்ள நீர் பாதியளவிற்குக் குறைந்துவிடும். இதுவே ஒரு தீபம் ஏற்றிவைத்து, அதிலிருந்து ஆயிரம் தீபங்கள் ஏற்றினாலும் முதல் தீபத்தின் அளவோ ஒளியோ குறைந்து விடுவதில்லை. அதைப்போல ஜோதி வடிவமாகிய தனிப்பரம் பொருளாகிய இறைவனிடமிருந்து இவ்வாறு ஆயிரமாயிரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

தெய்வங்கள் தோன்றினாலும் மூல ஜோதியின் அளவு குறைவதில்லை. அதிலிருந்து பிறந்த ஜோதிகளான பிற தெய்வங்களின் மகிமையும் குறைவதில்லை. ஒரே இறைவன் மாறுபட்ட பல பெயர்களால் அழைக்கப் பெற்றாலும் அவற்றிற்குள் ஏற்றத் தாழ்வுகள் இல்லை எனபதை உணர்த்தும் விதமாக அமைவதே பூர்ணகும்ப தீப வழிபாடாகும். இதனையே வேதங்கள்

"பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே |
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ||

என்று வருணிக்கின்றன.

இதன் பொருள் :

"இதுவும் பூர்ணம் அதுவும் பூர்ணம், எல்லாம் பூர்ணமாகவே இருக்கின்றன. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தபிறகும் பூர்ணமே எஞ்சி நிற்கின்றது" என்று கூறுவதன் மூலம் மேலும் தெளிவடையலாம். இதைப்போலவே விபூதி, குடை, கண்ணாடி சாமரம் போன்றவற்றிற்கும் கூட தத்துவப்பூர்வமான விளக்கங்கள் கூறலாம்.

விபூதி:-

"விபூதிர் பூதிர் ஐச்வர்யம் அணிமாதிக மஷ்டதா |
அணிமாமஹிமா சைவ லஹிமா கரிமா ததா ||
பிராப்திப் ப்ராகாம்யமீசித்வம் வசித்வம் சாஷ்ட ஸித்தய: ||

என்று விபூதி மஹாத்மியம் விபூதியைப் பற்றி வருணிக்கின்றது. விபூதி என்றால் ஐச்வர்யம் என்று பொருள். விபூதிக்கு மேலான செல்வம் இல்லை என்று கூறுவார்கள். மேலும் அணிமா முதலான அட்டமாசித்திகளையும் அளிக்கவல்லது திருநீறு. இத்தகைய மகிமை வாய்ந்த திருநீறு ஷோடசோபசாரத்தின் போது இறைவனின் காலடியில் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஏனெனில் எத்தகைய மேலான செல்வமாக இருப்பினும் மேலான ஸித்தியாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சக்தியாக இருப்பினும் அவையெல்லாம் இறைவனின் காலடித் துகள்களுக்குச் ஸமமானவை. பரம்பொருளே அனைத்திலும் உயர்ந்தது என்பதை உணர்த்தும் விதமாகவும்.

மேலும் சாம்பல் என்பது அழியாத் தன்மைகொண்டது. எந்தவொரு பொருளையும் எரித்தாலும் அது சாம்பலாகும் ஆனால் சாம்பலையே எரித்தால் அதில் எவ்விதமாற்றமும் நிகழாது மீண்டும் சாம்பலாகவே இருக்கும். அதுபோல நம்மிடமுள்ள ஆனவாதிமலங்களை எரித்து எஞ்சி நிற்கும் சாம்பலாகிய ஆன்மாவை இறைவனின் காலடியில் சமர்பித்தும் இறைவா நிலையை அடையவேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாகவும் அந்த விபூதி வழிபாடு செய்யப்படுகிறது.

கண்ணாடி :-

"அடுத்தது காட்டும் பளிங்கு" என்று வள்ளுவர் கூறுவதுபோல தம்முன் நிற்கும் பிம்பத்தை அப்படியே பிரதிபலிப்பது கண்ணாடியின் குணம். அதுபோலவே தம்முன் நிற்கும் இறை அம்சமே நம் அகத்தில் ஜீவாத்மாவாகப் பிரதிபலிக்கின்றது என்பதை உணர்த்துவதே கண்ணாடி உபசாரம்.

"அகம் ப்ரஹ்மாஸ்மி" என்று வேதங்கள் இதனை வருணிக்கும். அதற்காக நம்முள் இருப்பது இறையம்சம் அதனால் நாமே இறைவன் என்று இரண்யனைப் போல அகந்தை கொள்ளக்கூடாது. கடலிலிருந்து ஒரு செம்பு நிறைய நீரை முகந்தெடுக்கிறோம். இப்போது செம்பிலிருப்பதும் கடல்நீர்தான் அதனால் அதனையே கடல் என்று சொல்லிவிட முடியுமா? அதுபோல நம்முள் இருப்பதும் இறையம்சம் பொருந்திய ஜீவஜோதிதான். இந்த ஜீவ ஜோதியை அந்த மூலஜோதியோடு இணைக்கும் பொழுதுதான் நம் வாழ்வு முழுமையுறுகிறது என்பதை உணர்ந்து வழிபடுவார்க்கு அவன் திருவடி நிழலை அடைவது எளிதான செயலே. ஜீவனின் வடிவு ஜோதி வடிவானது

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

என்றாலும் அதன் அளவு அணுவளவே என்பதை நாம் மறக்கலாகாது. சூரியனுக்கு முன்னால் விளக்கொளி எம்மாத்திரம் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

குடை:-

மழை, வெயில் போன்றவற்றிலிருந்து மனிதனைப் பாதுகாப்பது குடை. அதுபோல அஞ்ஞானம் என்னும் வெயில், பந்தபாசமென்னும் மழை போன்றவற்றால் நாம் பாதிக்கப்படாமல் இறையுணர்வு நம்மைப் பாதுகாக்கிறது என்பதை உணர்த்துவது குடை உபசாரம்.

சாமரம் (விசிறி)

பஞ்ச பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பனவற்றில் நீர் அபிஷேகத்திற்கும் நிவேதனத்திற்கும் பயன்படுகிறது. இறையுருவம் மண்ணிலிருந்து எடுக்கப்பெற்ற கல்லினாலும் உலோகத்தாலும் ஆனது. நெருப்பு - ஹோமம் தீபாராதனை போன்றவற்றிற்குப் பயன்படுகிறது. ஆகாயத்தின் தன்மையைக் குறிக்கவும், விண்வெளியிலிருந்து சக்தியை ஆகர்ஷணம் செய்யும் விதத்திலும் கோபுர கலசங்கள் ஆகாயத்தை நோக்கிக் கூர்மையான முனைகளுடன் அமைக்கப்பெறுகின்றன. அந்தவகையில் பார்க்கும்பொழுது வழிபாட்டில் காற்றின் பயன்பாடு குறைவாகவே உள்ளது. எனவே இறைவழிபாட்டில் காற்றைப் பயன்படுத்தவும், காற்று மூலக்கூறுகளில் நிறைந்துள்ள இறை சக்தியை இறையுருவத்தில் தங்கச்செய்யும் விதத்திலும் சாமரம் விசிறி, தூபம், போன்ற உபசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பஞ்சபூதங்கள்கூட ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதுதான் நைட்ரஜன், ஆக்ஸிஜன் என்னும் இரண்டு வாயுக்களின் கலவையே நீர், அந்நீரை எந்நேரமும் தாங்கி நிற்பது நிலம், நிலத்திலுள்ள நீர் ஆவியாக உதவுவது வெப்பம் என்னும் நெருப்பு, அவ்வாறு ஆவியாக்கப்பெற்ற நீராவியைத் தாங்கிநிற்பது ஆகாயம், ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கும் நீராவியை மீண்டும் நீராக்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

நிலத்திற்குக் கொண்டுவரும் குளிர்ந்த காற்று, என்று ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பது மட்டுமல்லாமல் ஒன்றில்லை யென்றால் மற்றொன்று இல்லை என்னும் நிலையில் பின்னிப் பிணைந்திருப்பதை உணரமுடிகிறது. இவை அனைத்தும் மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அதனாலேயே இறை வழிபாட்டோடு இவற்றை இணைத்துச் சொல்லப்படுகிறது. என்கிற உண்மையும் நாம் உணரவேண்டும்.

மேலும் காற்று எங்கும் நீக்கமற நிறைந்திருந்திருந்தாலும், கோடை காலத்தில், வெப்பத்தின் தாக்கம் மிகுதியாக இருக்கும் காலத்தில், விசிறியைக் கொண்டு வீசுகின்ற போதுதான் நம்மைச்சுற்றி நிறைந்திருக்கக் கூடிய காற்று நம் உடலின் மீது பட்டு நமக்கு இன்பமளிக்கின்றது. அதுபோல ஆணவ மலங்களின் வெப்பத்தால் நாம் பாதிக்கப்படுகின்ற பொழுது, பக்தி என்னும் கையில், ஈடுபாடு என்னும் விசிறியைக் கொண்டு வீசும் பொழுதுதான், நம்மைச் சுற்றி நீக்கமற நிறைந்திருக்கும் இறை சக்தியால் நமக்கு பேரின்பம் ஏற்படுகிறது என்கிற தத்துவமும், இந்த சாமர உபசாரத்தில் மறைபொருளாக உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு இறைவழிபாட்டில் மறைத்து வைக்கப் பெற்றுள்ள உண்மைகளை அறிந்து உணர்ந்து வழிபாட்டில் நாம் ஈடுபடுகின்ற பொழுது மன நிறைவு ஏற்படுவதோடு, கிடைக்கும் நற்பலனும் அதிகமாகும் என்பதில் ஐயமில்லை.

உணர்ந்து வழிபடுவோம்!

உயர்வான பலன்கள் பெறுவோம்!!

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சண்டீசரை ஏன் முழுமையாக வலம் வரக்கூடாது... ?

எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரவர் மத ஸம்பிரதாயப்படி இறைவழிபாடு செய்ய வேண்டியது அவசியம். அதுவே அந்த மதக்கோட்பாடுகளை நாம் பின்பற்றுகிறோம் என்பதற்கு அடையாளம். அந்த வகையில் இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆலய வழிபாடு முக்கியக்கடமை என்பதிலே மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அவ்வாறு நாம் ஆலய வழிபாடு செய்கின்றபோது அங்கே பலவிதமான முறைகளில் இறைவனை வழிபடுகின்றோம். அபிஷேகம், அர்ச்சனை, ஸ்தோத்ரம், ப்ராத்தனை போன்றவை வழிபாட்டின் சில அங்கங்கள். அவ்வாறு வழிபடும் வழிபாட்டில் வலம் வருதலும் (பிரதக்ஷிணம்) ஓர் முக்கிய அம்சமாகும். அப்படி வலம் வருவதற்குக்கூட சிலவழிமுறைகள் வகுக்கப்பெற்றுள்ளன.

குறைந்தபக்ஷமாக விநாயகரை ஒருமுறையும், சூரியனை இரண்டுமுறையும், சிவபெருமானை மூன்றுமுறையும், அம்பிகையையும், மஹாவிஷ்ணுவையும் நான்குமுறையும், அரசமரத்தை ஒருமுறையும் வலம்வர வேண்டும்.

ஏகம் விநாயகே ப்ரோக்தம்
த்வே சூர்யே த்ரீணி சங்கரே |
சத்வாரி தேவ்யா விஷ்ணோச்ச
ஸப்தாச்வத்த ப்ரதக்ஷிணம் ‖ (ஸகலாகம ஸார ஸங்க்ரஹம்)

என்னும் ஸகலாகம ஸார ஸங்க்ரஹ ச்லோகம் இதனை வலியுறுத்தும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அவ்வாறு ஸன்னிதியை வலம் வருகின்றபொழுது குறிப்பாக சைவசமயத்தைச் சார்ந்த ஆலயங்களில் வலம் வருகின்றபொழுது சிவன், அம்பிகை முதலான ப்ரதான ஸன்னிதிக்கு இடப்புறத்தில் சண்டேசருக்கென்றே தனியாக ஒரு ஸன்னிதி இருக்கும். (எல்லா ப்ரதான ஸன்னிதிகளுக்கும் இடப்புறம் சண்டேசர் சன்னதி இருக்குமா என்று நீங்கள் வினா எழுப்புவது புரிகிறது. கீழேயுள்ள ஆகம ச்லோகத்தை கவனியுங்கள்)

"தேஜஸ் சண்டோரவேசைவ கும்பசண்டோ விநாயகே|

மித்ரசண்டோ குஹ: சைவ உமாயாம் யமினீததா|

த்வனிசண்டோ சிவ: சைவ பஞ்ச சண்டா: ப்ரகீர்த்திதா: ||

என்ற சிவாகம வாக்கியப்படி சூரியனுக்கு தேஜஸ்சண்டர், விநாயகருக்குக் கும்பசண்டர், முருகப் பெருமானுக்கு மித்ரசண்டர், அம்பிகைக்கு யமினி அல்லது சண்டீச்வரி, சிவபெருமானுக்கு த்வனிசண்டர் என்று ஐந்து மூர்த்திகளுக்கும் ஐந்து சண்டேச்வரர்களை அடையாளம் காட்டுகிறது சிவாகமம்.

இதிலிருந்து ஒன்றை நம்மால் யூகித்து அறியமுடிகிறது. அதாவது ஒரு பெரிய அதிகாரியின் அல்லது முதலாளியின் அந்தரங்க உதவியாளரை இன்று நாம் (P.A) அந்தரங்க காரியதரிசி என்று அழைப்பதுபோல், விநாயகர், முருகன் சிவன் போன்ற தெய்வங்களின் அந்தரங்க காரியதரிசிகளாக இருந்தவர்களை (or) இருப்பவர்களை சண்டேசர்கள் என்று அழைத்து வருகின்றனர். இந்த சண்டேசப்பதவியையே சேய்ஞலூரில் பிறந்து, சிவகைங்கர்யத்திற்கு இடையூறாக இருந்த தனது தந்தையின் கால்களையே வெட்டி பக்தியை வெளிப்படுத்திய விசாரசருமருக்குச், சிவபெருமான் வழங்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

சிவகணங்களுக்குத் தலைவனாக்கினார். "சண்டீசருமாம் பதம் தந்தோம்" என்ற பெரியபுராணவாசகம் இதனை நன்கு உணர்த்தும்.

இவற்றில் மற்ற மூர்த்தங்களுக்குத் தனியாக சண்டேசர் ஸன்னிதிகள் அமைப்பது ஏறத்தாழ வழக்கிழந்துவிட்டது. பழைமையான பெரிய சிவாலயங்களில் அம்மனுக்கு மட்டும் தனியாக சண்டீச்வரீ ஸன்னிதி காணப்படுகிறது. சில முக்கியமான ஆலயங்களில் முருகப்பெருமானுக்கும் சண்டீசர் ஸன்னிதி உள்ளது. ஆனால் சிவபெருமானுக்கு சண்டேசர் ஸன்னிதி அமைக்கும் வழக்கத்தை கட்டாயமாகப் பின்பற்றி வருகிறோம். எனவே சிவபெருமானுடைய ஸன்னதியின் இடப்புறத்தில் சிறியதாக ஒரு சண்டேச்வரர் ஸன்னிதி கண்டிப்பாக இருக்கும்.

இவ்வாறு விளங்கக்கூடிய ஆலயங்களில் சிவபெருமானை வலம் வருகின்ற பொழுதோ, மற்ற அம்பிகை, முருகன் முதலான ஸன்னிதிகளிலும் வலம் வருகின்றபொழுதோ, அங்கே சண்டேச்வரர் ஸன்னிதி இருக்குமானால், அந்த சண்டேச்வரரை முழுமையாக வலம் வராமல் அவருக்கு வலப்புறமாக வந்து அரைச்சுற்று மட்டும் சுற்றிவிட்டு மீண்டும் வந்த வழியிலேயே வந்து ப்ரதக்ஷிணத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பது நடைமுறை. இதனை நாம் ஒவ்வொருவரும் தவறாமல் கடைபிடித்து வருகிறோம். இது ஏன்? இந்த நடைமுறை விளக்கும் உண்மை என்ன என்பதனை அறிவோமா நாம்?

முதலில் சண்டீச்வரரை பற்றித் தெரிந்து கொள்வோம்.

சண்டேசர் என்பவர் சிவகணங்களிலே முக்கியமானவர். அவர் சிவபெருமானுடைய காரியதர்சி. அவரில்லாமல் சிவவழிபாடு நிறைவுபெறுவது இல்லை. ஆலயங்களில் நடைபெறும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

விழாக்காலங்களில் பஞ்சமூர்த்தி புறப்பாட்டில் 1. விநாயகர், 2. வள்ளி தெய்வானை உடனுறை சுப்ரஹ்மண்யர், 3. ஸோமாஸ்கந்தர், 4. தனியம்மன், 5. சண்டிகேச்வரர் என்று பஞ்சமூர்த்திகளில் ஐந்தாவது மூர்த்தி என்னும் பெருமைக்குரியவர். எப்பொழுதும் சிவ சிந்தையோடு தியானத்தில் இருப்பவர்.

"ஓம் டங்க ஹஸ்தாய வித்மஹே சிவ சிந்தாய தீமஹி

தந்ந: சண்ட: ப்ரசோதயாத்"

என்கின்ற சண்டேசர் காயத்ரி இதனை உணர்த்தும்.

சிவாலய தரிசனம் செய்த புண்ணியத்தைத் தரக்கூடிய அதிகாரம் அவரிடமே உள்ளது. அதனால்தான் நிறைவாக அவரை வணங்கி பிராத்திக்கிறோம். (அவர் எப்பொழுதும் தியானத்தில் இருப்பவராத்லால் அவரிடம் கை தட்டுதல் நூல் பிய்த்துப் போடுதல், சொடுக்கு போடுதல் போன்றவை செய்யக்கூடாது.

சிலர் சொல்கிறார்கள் - அவர் சிவனடியார்களுள் ஒருவர். மேலும் சிவனுடைய அந்தரங்க உதவியாளர் (P.A) எனவே அவரை முழுமையாக வலம் வந்தால் சிவனுடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும். அதனால் அவரை அரைவட்டமாக வலம் வந்து வணங்கவேண்டும் என்று கூறுகிறார்கள்.

"இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்" என்று ஔவையார் கூறுவது போல, "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்கின்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க. இறைவன் தொண்டர்களுடைய உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு அதில் உறைபவன். திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோவிலிலே திருவாசகம் பாடிய மணிவாசகருக்காக, தம்மை மறைத்துக்கொண்டு ஆலயம், வாகனம், தேர், திருவிழா என்று எல்லாவற்றையும் அர்பணித்துத் தனக்குக் கிடைக்கவேண்டிய அனைத்துச் சிறப்புக்களையும் தனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

தொண்டனுக்காக விட்டுக்கொடுத்த கருணாமூர்த்தி அவர். அப்படிப்பட்டவர் தனது தொண்டரை முழுவலம் வருபவரை தண்டிப்பாரா?

மேலும் P.A-வை காக்கா பிடித்துதானே தலைவரிடம் பலவிதமான காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது தொண்டர்கள்தான் அவரை திருப்தி செய்வதை விட்டுவிடுவார்களா? எனவே காரணம் அதுவல்ல என்பது உறுதி. அதையும் தாண்டி வேறு ஏதோ ஒரு ஸூக்ஷ்மம் அதில் அடங்கியிருக்கிறது. அது என்ன? இதைப்பற்றி பிறகு பார்ப்போம்.

இப்பொழுது ஓம்காரத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

"ஓம்" இந்த ஒலியோடு துவங்காத மந்த்ரங்களே இல்லை எனலாம். இதனை வேறுவிதமாகவும் சொல்லலாம். அதாவது ஓம்காரத்தோடு துவங்காத எந்த மந்த்ரமும் பலனற்றவை எனலாம். ராமநாமம் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அ+உ+ம . அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றின் மொத்த வடிவமே ஓம்காரம். இந்த ஓம்காரமே அனைத்தின் விரிவுகளும், உட்பொருளுமாகிறது என்று மெய் நூல்கள் கூறுகின்றன. முற்காலத்தில் ஓம்காரம் மட்டுமே இருந்தது என்றும் அதிலிருந்தே அனைத்து வேதங்களும் தோன்றியது என்றும் மூல நூல்கள் கூறுகின்றன.

"முக்கட்பரமற்குச் சுருதியின் முற்பட்டது கற்பித்தது"

(முத்தைத்தரு திருப்புகழ்)

என்ற அருணகிரியாரின் வாக்கு இதனை உறுதிப்படுத்தும். ஆக ஓம்காரமே அனைத்திற்கும் பிரதானமானது என்பது தெளிவு.

அதன் காரணமாகத்தான் அனைத்து மந்திரங்களும் ஓம்காரத்தை முன்னிருத்தி இயங்குகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

அப்படிப்பட்ட ஓம்காரத்தை மந்திர ஜபங்களுக்கு மட்டுமல்லாது வழிபாட்டிலும் குறிப்பாக ப்ரதக்ஷிணத்திலும் பயன்படுத்த வேண்டும் என்று நமது முன்னோர்கள் நினைத்தார்கள். அதன் வெளிப்பாடாக அமைந்ததுதான் சண்டேசருக்கு 1/2 பிரதக்ஷிணம். என்ன? புரியவில்லையா? சிவாலயத்தில் நாம் ப்ரதக்ஷிணம் செய்யும் விதத்தைச் சற்று உற்று நோக்குங்கள். உண்மை விளங்கும்.



நாம் ஆலயத்திலே கருவறை மூர்த்தியை வணங்கச் செல்லுமிடத்து, முதலில் ஸன்னிதி முன்னால் வலப்புறமாக நின்று இறைவனை வணங்குகின்றோம். பிறகு வலமாக வருகிறோம். சண்டீசர் ஸன்னிதியை வலமாக வந்து அவரை தரிசித்துவிட்டு மீண்டும் வந்த வழியிலேயே பின்னோக்கி வந்து பிறகு ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்கரிக்கிறோம். இந்த முறையில் வணங்கும்பொழுது

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

நமது பிரதக்ஷிணம் ஒரு முழுப் பிரணவ வடிவத்தைப் பெறுகிறது. என்ன வியப்பாக இருக்கிறதா? இதுதான் உண்மை. இதன் காரணமாகத்தான் சண்டேசருக்கு 1/2 பிரதக்ஷிணம் என்கின்ற வழக்கத்தை, நடைமுறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் நமது முன்னோர்கள். இந்த உண்மையை உணர்ந்து வழிபடும்பொழுது வழிபாட்டின் பலனும் நமக்கு இரட்டிப்பாக கிடைக்கிறது.

"உண்மை உணர்ந்து வழிபடுவோம்
உள்ளம் நிறைந்த அருள் பெறுவோம்"



Center for Shaiva Studies, Pondicherry Collection

0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-M

எங்களது பெற்றோரின்
மணிவிழாவிற்கு வருகைதந்த
அனைவருக்கும்
எங்களது
மனமார்ந்த நன்றிகளை
காணிக்கையாக்குகிறோம்.

பேரன்புடன்

ஸ்ரீமதீ. **அன்னபூரணீ சங்கர்**

சிங்கப்பூர்.

ஸ்ரீமதீ. **ஐச்வர்யா ராஜேஷ்**

மானாமதுரை.

ஸௌபாக்யவதீ. **V. கனகதாரா**

தேவகோட்டை.

பேரக் குழந்தைகள் :

S. சிவதாரிணி

R. சிவாஸனா

R. சிவஸ்ரீ ஜா

Center for Shaiva Studies, Pondicherry Collection